# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை
# கிருஷ்ணகிரி மாவட்டம்

**முன்னிலை : திரு. P. சுந்தரமூர்த்தி, B.Com., LL.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஊத்தங்கரை (மு.கூ.பொ.)**

**2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 12–ம் நாள் வியாழக்கிழமை**

## I.A.No. 10 of 2024 in O.S.No. 65 of 2020
**CNR.No.TNKI13-000077-2020**

கணேசன் ...மனுதாரர் / 9–ம் பிரதிவாதி

//எதிர்//

பிரேமா ...எதிர்மனுதாரர் / வாதி

இந்த இடைமனுவானது 12.02.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. பாஸ்கர், அவர்களும் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G.M. அருள், அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு, இந்நாள்வரை ஆய்வில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்:

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது கட்டளை VIII விதி 11(a) & (d) சி.பி.சி–ன் கீழ் வாதியின் தாவாவை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுஉரை சுருக்கம்:**

2(i). மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் 9-ம் பிரதிவாதி, எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர் தாவா சொத்துகளை குறித்து ஏற்பட்டுள்ள ஆவணங்களை செல்லாது என்று விளம்புகை செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும் தாவா தாக்கல்

செய்துள்ளார். எதிர்மனுதாரர் மனுதாரருக்கு தெரியாமல் ஒருதலை பட்டசமாக தீர்ப்பாணை பெற வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர் பெயரில் உள்ள ஆவணங்களில் உள்ள மனுதாரரின் முகவரி தெரிந்திருந்தும் மேற்படி சங்கதியை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு தாவா தாக்கல் செய்திருந்தது குறித்து தெரிந்த பிறகு வழக்கறிஞரை நியமனம் செய்தார். எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள தாவாவில் கூறியுள்ள சங்கதிகளில் இருந்தே தாவா தாக்கல் செய்வதற்கு எவ்வித வழக்கு மூலமும் இல்லை என்பதும், தாவா கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது நிரூபணமாகிறது.

2(ii). தாவா 3-ம் பத்தியில் எதிர்மனுதாரருக்கு R.E.P.No.90/1996-ல் வழங்கப்பட்ட ஏலச்சான்றிதழ் படி பாத்தியம் என்று கூறியுள்ளார். எதிர்மனுதாரர் பெயரில் 31.12.2001-ம் தேதி வழங்கப்பட்டதாக தாவாவில் கூறியுள்ள ஏலச்சான்றிதழ் குறித்து தாவா சொத்துக்களுக்கான வில்லங்க சான்றிதழில் இதுநாள் வரை குறிப்பு எதுவும் ஏற்படுத்தவில்லை. மேலும் ஏலச்சான்றிதழ்படி எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் பொதுவில் 1/5 பங்கு குறித்து மட்டும் ஏலம் எடுத்ததாக கூறப்பட்டுள்ள நிலையில் மேற்படி ஏலச்சான்றிதழ்படி எதிர்மனுதாரர் பாகப்பிரிவினைக்காக வழக்கு தாக்கல் செய்து அவருடைய 1/5 பங்கை பிரித்து சுவாதீனம் பெற்றதாக தாவாவில் கூறவில்லை. மேலும் அவ்வாறு எதிர்மனுதாரருக்கு ஏலச்சான்றிதழ் வழங்கப்பட்ட ஒரு வருடத்திற்குள் சுவாதீனம் பெறாத நிலையில் எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் சுவாதீனம் இருந்ததாக தாவாவில் கூறியிருப்பது உண்மைக்கு புறம்பானது.

2(iii). மேலும் எதிர்மனுதாரர் அவருடைய கணவருக்கு எதிராக ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்தது மற்றும் தாவா சொத்துக்களை

பற்றுகை செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், மனுதாரர் தாவா சர்வே எண்.24/2 குறித்து 11.11.2013-ம் தேதியிட்ட வில்லங்கச் சான்று பெற்ற போது வில்லங்க சான்றில் எதிர்மனுதாரர் வழக்கில் கூறியுள்ள நீதிமன்ற பற்றுகை குறித்து எவ்வித குறிப்புமில்லாத காரணத்தால் மனுதாரர் மேற்படி சொத்தை 06.03.2014-ம் தேதியிட்ட ஆவண பதிவு எண். 800/2014 கொண்ட கிரையப்பத்திரப்படி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்.

2(iv). மேலும் தாவா சொத்துக்களான சர்வே எண்.28, 26 மற்றும் 27 ஆகியவற்றிற்கான வில்லங்க சான்றிலும், நீதிமன்ற பற்றுகை பற்றிய குறிப்பு எதுவும் இல்லாத காரணத்தினால்தான் மனுதாரர் மேற்படி சொத்துக்களை 06.03.2014-ம் தேதியிட்ட கிரய ஆவண எண்.802/2014, 10.04.2014-ம் தேதியிட்ட இரண்டு கிரய ஆவண எண்கள்.2246/2014 மற்றும் 2247/2014 கொண்ட கிரய ஆவணங்கள் படி கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார். மேற்படி 2 வில்லங்க சான்றுகளையும் இத்துடன் தாக்கல் செய்துள்ளார். ஆனால் தற்போது வாதி நீதிமன்ற பற்றுகை ஆவண பதிவு எண்.09/1992-ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளதாக வில்லங்க சான்றை தாக்கல் செய்துள்ளார்.

2(v). மேலும் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள 12.02.2015-ம் தேதியிட்ட வில்லங்க சான்றிலேயே எதிர்மனுதாரர் நீதிமன்ற பற்றுகை ஏற்படுத்துவதற்கு முன்பாகவே 1-ம் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் 5, 8 மற்றும் 10-ம் பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துள்ள விவரம் பதிவாகியுள்ளது. ஆகையால் எதிர்மனுதாரர் மேற்படி விற்பனையை தெரிந்தே நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தாமல் பற்றுகை உத்தரவை பெற்றுள்ளார். ஆகையால் மேற்படி பற்றுகை உத்தரவு ஏற்படுவதற்கு

முன்பாகவே விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களை கட்டுப்படுத்தாது. மேற்படி பற்றுகை உத்தரவின் அடிப்படையில் சொத்துக்களை ஏலம் விடப்பட்டு ஏலச்சான்றிதழ் எதிர்மனுதாரருக்கு வழங்கியுள்ளதும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி ஏலச்சான்றிதழின் அடிப்படையில் எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் கோர அருகதையில்லை. ஆகையால் தாவா தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் இல்லை என்பது தெளிவாகிறது.

2(vi). எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள 12.02.2015-ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழில் தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்பட்டுள்ள அனைத்து ஆவணங்களின் குறிப்பும் எதிர்மனுதாரருக்கு தெரியவந்த நிலையில் மேற்படி வில்லங்க சான்று பெற்றப்பிறகு மேற்படி ஆவணங்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் எதிர்மனுதாரர் 27.08.2020 தேதிதான் தாவாவை தாக்கல் செய்துள்ளார். ஆகையால் 3 வருடங்களுக்குள் தாவா தாக்கல் செய்யாத காரணத்தால் வாதி தாவா சொத்துக்களை குறித்து ஏற்பட்டுள்ள ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர் தாவாவில் தாவா சொத்துக்களை குறித்த ஆவணங்கள் ஏற்படுத்திய விவரம் எதிர்மனுதாரருக்கு எப்போது தெரிய வந்தது என்பது குறித்து தாவாவில் கூறாமல் தாவா தாக்கல் செய்துள்ளார்.

2(vii). மேலும் மேற்சொன்ன சங்கதிகளின் அடிப்படையில் எதிர்மனுதாரர் தாவா தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் என்பதும், கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும், விளம்புகை கோருவதற்கு

அருகதையுமில்லாததால் எதிர்மனுதாரர் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோருவதற்கு அருகதையில்லை. மேலும் தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரர்/வாதி சுவாதீனத்தில் உள்ளார் என்பதற்கான எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் தாக்க செய்துள்ள தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தாவாவை விசாரணை மேற்கொண்டு முடிவு காண்பதில் கால விரயமும், பண விரையமும் மனுதாரருக்கு ஏற்படும். நீதிமன்றத்தின் நேரமும் விரயம் ஆகாமல் காக்கப்படும். ஆகையால் தாவாவை நிராகரிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே வாதியின் தாவாவை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரரின் எதிருரை சுருக்கம்:**

3(i). வழக்குரையை நிராகரிக்க கோரும் மனுதாராரின் மனுவானது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கில் உண்மை நிலையை வெளிப்படுத்திவிடக்கூடாது என்பதற்காகவும் வழக்கின் விசாரணை நடைபெருவதை காலதாமதப்படுத்த வேண்டும் அல்லது விசாரணையே நடந்துவிடக்கூடாது என்ற உள்நோக்கத்துடனும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையும் தடைபடுத்த வேண்டும், இடைக்கால தடை கோரும் மனுவிலும் உத்தரவு வழங்கப்பட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையிலும் உள் நோக்கத்துடனும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3(ii). இந்த வழக்கின் வாதி பிரேமா தனது கணவர் 1-ம் பிரதிவாதி தரவேண்டிய ஜீவனாம்ச தொகைக்காக நீதிமன்ற உத்திரவுப்படி ஜப்தி செய்யப்பட்ட நிலையில் அந்த சொத்துக்களை தைரியமாக மூன்றாம்

நபர்களுக்கு விற்பனை செய்து சட்டத்திற்கும் நியாயத்திற்கும் முரணாக இதுநாள்வரை செயல்பட்டு நீதிமன்ற ஜப்தி செய்யப்பட்டுள்ள சொத்துக்களை வெளி நபர்கள் 10 பேருக்கு விற்றுவிட்டு நீதிமன்றத்தால் என்ன செய்துவிடமுடியும் என்ற அராஜகமான எண்ணத்துடனும், வாதி ஒரு பெண்தானே என்ன செய்துவிட முடியும் என்ற வன்மமான எண்ணத்துடனும் கடந்த 2020-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மனுதாக்கல் செய்து இந்த வழக்கு நடைபெறவே கூடாது என்ற நோக்கத்தில் வேண்டுமென்றே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்து வழக்கு விசாரணைக்கு உத்திரவிட வேண்டியது நியாயமான ஒன்றாக உள்ளது.

3(iii). எதிர்மனுதாரர் சமர்பிப்பது யாதெனில் ஒரு வழக்கின் வழக்குரையை நிராகரிக்க வேண்டுமெனில் சிவில் நடைமுறை சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள 6 காரணங்ளுக்காக மட்டுமே ஒரு நீதிமன்றம் வழக்கை நிராகரிக்க முடியும். மனுதாரரின் முகவரி தவறாக வேண்டுமென்றே குறிப்பிட்டுள்ளது என்பது தவறான தகவல், ஆவணத்தில் உள்ள ஒசூர் முகவரிக்கு சம்மன் சார்வு செய்த காலத்தில் அவர் தனது வாடகை வீட்டை இடம் மாற்றிக்கொண்டு கோயம்புத்தூர் முகவரிக்கு குடிபெயர்ந்து சென்றுள்ளார். இது மனுதாரரின் தவறே தவிற எதிர்மனுதாரரின் தவறு அல்ல. மேலும் மனுதாரர் தனது முகவரியாக அவரே எழுதிக்கொடுத்துள்ள கோயம்புத்தூர் முகவரியை வழக்கில் திருத்தம் செய்துக்கொள்ள I.A.3/2022 என்ற இடைமனுவிற்கு வழக்கு சொத்தை விற்றுள்ள மற்ற பிரதிவாதிகள் D5, D10, மற்றும் 1-ம் பிரதிவாதி என யாருமே எதிர்மனுஉரை தாக்கல் செய்யாமல் பிரதிவாதிகள் ஒன்றாக சேர்ந்துக்கொண்டு வாதிக்கு இந்த வழக்கில் நியாயமான ஒரு பரிகாரம்கூட கிடைக்காதவாறு செயல்பட்டு

இருக்கிறார்கள். இவை அனைத்தும் Notes-paper எனப்படும் வழக்கு குறிப்பேட்டினை கவனித்தால் 29 வாய்தாக்கள் வேண்டுமென்றே காலதாமதம் செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது. ஆகவே இத்தகைய மனுதாரருக்கு கனம் நீதிமன்றம் ஏன் Exemplary cost எனப்படும் செலவுத்தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்யக்கூடாது என்று இந்த வாதி / எதிர்மனுதாரர் வேண்டிக்கொள்கிறார்.

3(iv). வாதி / எதிர்மனுதாரர் மற்றும் 1-ம் பிரதிவாதி இருவரும் கணவன்-மனைவி. கணவனை பிரிந்த வாதி தாக்கல் செய்த ஜீவனாம்ச வழக்கிலும் அவருக்கு பரிகாரம் கிடைக்காதவாறும் ஜீவனாம்ச வழக்கின் தீர்ப்பினையொட்டி கணவர் 1-ம் பிரதிவாதியின் சொத்துக்கள் ஜப்தி தேதி 02.07.1992 ஜப்திசெய்யப்பட்டு ஜப்தி நிலுவையில் இருக்கும் போதும் உரிய பரிகாரம் கிடைக்காதவாறு செயல்பட்டு ஜப்தி சொத்துக்களை மிக தைரியமாக பிரதிவாதிகளுக்கு விற்று விற்பனை செய்த முதல் தேதி 01.12.1993 ஆகும். அனைத்து கிரய பத்திரங்களும் அந்த தேதிக்கு பிறகுதான் ஏற்பட்டுள்ளது. ஆக அந்ததந்த பிரதிவாதிகள் மூலமாக புதிய புதிய பரிமாணத்தில் வழக்கினை நடத்திவருகிறார். அதில் ஒரு பரிமாணம்தான் இந்த வில்லங்க சான்று வாதி /எதிர்மனுதாரர் வில்லங்க சான்று வாங்கினால் ஜப்தி உத்திரவு காட்டுகிறது, ஆனால் இந்த மனுதாரர் வில்லங்க சான்று வாங்கினால் எந்த ஜப்தி உத்திரவும் காட்டுவதில்லை.

3(v). இந்த வழக்குரையை நிராகரிப்பது என்பது சட்டத்திற்கும் நியாயத்திற்கும் எதிரானது. ஆகவே இந்த மனுவை வாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து வழக்கின் விசாரணையை

துரிதமாக நடத்த உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. தீர்வுகாண வேண்டிய வினா:**

4(i). இம்மனுவில் முக்கியமாக தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**5. சாட்சியம்:**

5(i). இம்மனுவிற்கு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

**விவாதம்:**

6. அசல் வழக்கின் 9–ம் பிரதிவாதியான இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரங்கள் காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தாவாவை நிராகரிக்க வேண்டும் என்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பு வாதத்தின் படி எதிர்மனுதாரர் / வாதி அசல் வழக்கில் பல்வேறு ஆவணங்களை இல்லாநிலையது செல்லத்தக்கதல்ல என்று மட்டுமே விளம்புகை செய்யக்கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். உரிமை விளம்புகை பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை. மேலும் வாதி இல்லாநிலையது செல்லத்தக்கதல்ல என்று விளம்புவை செய்ய கோரும் ஆவணங்கள் குறித்து தனக்கு எப்போது தெரியவந்தது என்று தாவாவில் குறிப்பிட்டு கூறாமல் தாவாவை தாக்கல் செய்துள்ளார். இருந்தபோதிலும் வாதி தனது வழக்கிற்கு ஆதரவாக 2 வில்லங்கச் சான்றிதழ்கள் தாக்கல் செய்துள்ளார்.

அது வாதி தரப்பு ஆவணப்பட்டியலில் 6–ம் ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

7. மேற்படி வில்லங்கச் சான்றிதழ் கடந்த 08.11.2016 தேதியிலும் மற்றொரு வில்லங்கச் சான்று 12.02.2015 தேதியிலும் எதிர்மனுதாரர் / வாதியால் பெறப்பட்டு அவர் தனது வழக்கிற்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ளார். மேற்படி வில்லங்கச் சான்றிதழ்களின் அடிப்படையில் வாதி இல்லாநிலையது செல்லத்தக்கதல்ல என்று கூறும் ஆவணங்கள் வாதிக்கு தெரிய வந்துள்ளது என்று கூறியுள்ளதை கருத்தில் கொள்ளும் சமயத்தில் 2016 ஆம் ஆண்டுக்கு முன்பே வாதிக்கு மேற்படி ஆவணங்கள் குறித்து தெரிய வந்துள்ளது. எனவே அதிலிருந்து வாதி மூன்று ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால் வாதி இந்த வழக்கை 2020-ம் ஆண்டில் தாக்கல் செய்துள்ளார். எனவே வாதி கோரியுள்ள பரிகாரங்கள் காலவரையாரையால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே வாதியின் தாவாவை நிராகரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

8. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவானது கட்டளை VII விதி 11a மற்றும் 11d ஆகியவற்றின் அடிப்படையில் தாவாவை நிராகரிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 11-ன் படி ஒரு வழக்குரை நிராகரிக்கப்பட வேண்டும் எனில் அந்த விதியில் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக மட்டுமே வழக்குரையை நிராகரிக்கப்பட முடியும். வேறு காரணங்களுக்காக வழக்குரையை நிராகரிக்கப்பட முடியாது. மனுதாரர் தரப்பிலும் விதி 11a படி வழக்கு மூலம் இல்லை என்றும் 11d படி கால வரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே வழக்குரை நிராகரிக்கப்பட

வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. மேற்படி மனுவை கையாளும்போது நீதிமன்றம் வாதியின் வழக்குரை மற்றும் அவர் சார்ந்துள்ள ஆவணங்களை மட்டுமே பரிசீலனை செய்து உத்தரவு வழங்கப்பட முடியும். பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டுள்ள காரணங்கள் மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை கருத்தில் கொள்ள இயலாது என்பது நன்கு கட்டமைக்கப்பட்ட சட்ட கோட்பாடாகும்.

9. மேற்படி கோட்பாட்டினையும் கருத்தில் கொண்டு தாவாவை பரிசீலனை செய்கையில் மனுதாரர் கூறியுள்ளது போல் தாவாவில் 6-ம் ஆவணமாக வாதி வில்லங்கச் சான்றிதழ்கள் இரண்டு தாக்கல் செய்துள்ளார். அதில் அவர் இல்லாநிலையது செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யக் கோரும் ஆவணங்கள் குறித்து பதிவுகள் உள்ளது. மேற்படி வில்லங்கச் சான்று 2016-ம் ஆண்டிலேயே வாங்கப்பட்டுள்ளது. எனவே அவருக்கு 2016-ம் ஆண்டிலேயே மேற்படி ஆவணங்கள் குறித்து தகவல் தெரிந்துள்ளது என்று அறிந்து கொள்ள முடிகிறது. அதன்படி 3 ஆண்டுகளுக்குள் 2019-ம் ஆண்டிற்குள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யாமல் 2020-ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது காலவரையால் பாதிக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்ட வாதமானது சரியானதாகவும் உள்ளது.

10. மனுதாரர் தரப்பில் மேற்படி காலவரையினால் பாதிக்கப்பட்ட வழக்குகளை நிராகரிக்கலாம் என்ற மாண்பாமை உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பாமை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளை மேற்கோள் காட்டி வாதிடப்பட்டது. அதிலும் மாண்பாமை உச்ச நீதிமன்றம் **ராகவேந்திர**

**சரண்சிங் vs ராம்பிரசன்னசிங் (Died) by LRs** என்ற வழக்கில் **"Limitation is generally mixed question of Law and Facts and can be decided after parties lead evidence but if averments in plaint so suit is clearly bared by limiation same can be rejected in exercising power under Order VII Rule 11d"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்பின் அடிப்படையிலும் மனுதாரர் தரப்பு வாதம் நியாயமானதாகவே உள்ளது.

11. இருந்தபோதிலும் வாதியானவர் இந்த அசல் வழக்கை தாவா சொத்துக்கள் பொறுத்து நீதிமன்றத்தில் பற்றுகை உத்தரவு வழங்கப்பட்ட பின் தாவா சொத்துக்கள் பொறுத்து ஏற்பட்டுள்ள ஆவணங்கள் ஆரம்பம் முதலில் செல்லாது என்று அந்த ஆவணங்கள் இல்லாநிலையது செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார். மேலும் வாதியின் தாவா பத்தி 22-ல் void document-ஐ தனியாக சட்டத்தின்கண் ரத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டு கூறிவிட்டு மேற்படி ஆவணங்களை செல்லத்தக்கதல்ல என்று பிரிவு 31 உட்பிரிவு 2 குறித்த வகை நிவாரண சட்டத்தின்படி விளம்புகை செய்து தீர்ப்பின் பிரதியை உரிய சார்பதிவாளர் இடத்தில் அனுப்பி மேற்படி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள புத்தகத்தில் ஆவணங்களை ரத்து செய்யப்பட்டுவிட்டதாக பதிய தக்க உத்தரவு வழங்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்கையில் இந்த வழக்கில் இல்லாநிலையது செல்லத்தக்கதல்ல என்று கூறப்படும் ஆவணங்கள் நீதிமன்ற பற்றுகைக்கு பின் ஏற்பட்டுள்ளதால் அது செல்லத்தக்கதல்ல என்று கூறப்பட்டுள்ளது.

12. பிரிவு 64 CPC படி ஒரு சொத்து பற்றுகை செய்யப்பட்ட பின் ஏற்படும் தனிநபர் பரிவர்த்தனைகள் void என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சட்டப்பிரிவு பின்வருமாறு;

**“Section 64. Private alienation of property after attachment to be void.**

**(1) Where an attachment has been made, any private transfer or delivery of the property attached or of any interest therein and any payment to the judgment-debtor of any debt, dividend or other monies contrary to such attachment, shall be void as against all claims enforceable under the attachment.**

**(2) Nothing in this section shall apply to any private transfer or delivery of the property attached or of any interest therein, made in pursuance of any contract for such transfer or delivery entered into and registered before the attachment.”**

அதாவது அவ்வாறு பற்றுகைக்கு பின் ஏற்படும் ஆவணங்கள் ஆரம்பம் முதலே அவை செல்லதக்கதல்ல அவ்வாறு ஆரம்பம் முதலே செல்லத்தக்கதல்ல என்ற ஆவணங்கள் பொறுத்து அவை செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படுவதில்லை. அவ்வாறு செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்ய கோரும் வழக்கில் எந்த வகையான கால வரையறைக்கும் உட்பட்டதல்ல. காலவரையறை சட்டத்தின் சரத்து 59 ஆனது அதற்கு பொருந்தாது. அதனால் அந்த வழக்கானது மூன்று ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை என்ற கோட்பாட்டை மாண்பாமை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வானது கடந்த 08.12.2025 தேதியில் **Vimala Damayanthi vs J.R.Symon Morris, R.Karthigai Selvi, The**

**Branch Manager, Canara Bank, Gnanaolivupuram Branch, Madurai** என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பில் பத்தி 32-ல் பின்வருமாறு கூறியுள்ளது.

**"32. From the judgments of the Hon'ble Supreme Court and out High Court, the following the propositions of law emerge.**

**a). When a document is alleged to be a sham and nominal dlcument, it is document which void *ab initio.***

**b). A document which is void, need not be challenged by praying a declaration, as the said plea can be set up and proved even in collateral proceedings.**

**c). Since title has not passed to the transferee under a void document, the prayer for setting aside such transaction will be superfluous and the plaintiff will be entitled to ignore them all together.**

**d). With regard to a void document, since the prayer for declaration to declare the said document is superfluous, Article 59 of the Limitation Act would not get attracted.**

**e). If the plaintiff is in possession of the roperty, after execution of such a void document, he can very well seek for a superfluous declaratory prayer irrespective of the period of limitation.**

**On the other hand, if possession had passed on to the transferee under a void document, the plaintiff has to seek recovery of possession and the said would be governed under Article 65 of the Limitation Act."**

13. மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் ஒரு ஆவணம் (void) ஆரம்பம் முதலே இலாநிலையது என்ற ஆவணத்தை அது செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. அவ்வாறு விளம்புகை செய்ய கோருவது எந்த வகையான காலவரையறைக்கும்

உட்பட்டதல்ல என்று பல்வேறு முன் தீர்ப்புகளை பரிசீலனை செய்து மாண்பமை உயர்நீதிமன்றம் சட்டத்திற்கு விளக்கம் கொடுத்துள்ளது. எனவே வாதி தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் காலவரையறையால் பாதிக்கப்படவில்லை என்றும் முடிவு செய்யப்படுகிறது. மனுதாரர் தான் முறையாக வில்லங்கம் பார்த்து தாவா சொத்துக்களை வாங்கியுள்ளதாக கூறியுள்ள சங்கதிகள் பொறுத்து வழக்கை முழுமையாக விசாரணை செய்து மட்டுமே தீர்வு காண இயலும் என்பதால் அது இந்த மனுவில் முடிவு செய்ய இயலாது. இந்த வழக்கு உரிய வழக்குமூலத்தையும் உள்ளடக்கியுள்ளது.

14. மனுதாரர் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள முன் தீர்ப்புகள் ஒரு voidable ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை செய்ய கோரும் பரிகாரத்திற்கான காலவரையறைகளை குறித்து கூறப்பட்டுள்ளது. மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு வழங்கியுள்ள மேற்படி தீர்ப்பு ஆனது void ஆவணத்தை குறித்து பரிசீலனை செய்து முடிவு காணப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள முன் தீர்ப்புகள் இந்த வழக்கிற்கு பொருத்தமானதாக இல்லை.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை

**இணைப்பு**

**மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணம்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:** இல்லை

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை